Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (25-10-65) இதழ் 255

விசுவாவசு ஐப்பசி 9 ஜ: ஆகிர் பிறை 29 திங்கட்கிழமை

## எம். ஜி. ஆர்.

யாழ்ப்பாணம், திங். சிறியவர்கள் முதல் பெரியவர்கள்வரை எல்லோரின் வாயிலும் எம். ஜி. ஆரின் பெயர்தான் அடிபடுகிறது. யாழ்ப்பாணத்துக்கும் வருகிறார் என்று அறிவித்திருந்த போதும் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் மூலைமுடுக்குகளிலும் எம். ஜி. ஆர். பெயர் அடிபடத்தொடங்கிவிட்டது.

'மக்கள் திலகம்' எம். ஜி. ஆரைப் பார்க்கவேண்டுமென்ற ஆவலில் நேற்றுக் காலை மழையையும் பொருட்படுத்தாமல் பலர் யாழ்ப்பாணம் வந்திருந்தனர். ரசிகர்கள் சிலர் ரயில் நிலையத்தை நாடினர். வேறு சிலர் பலாலி விமானநிலையத்துக்கு விரைந்து சென்று பலமணி நேரம் காத்திருந்தனர். எத்தனை மணிக்கு என்ன மார்க்கமாக அவர் வருகிறார் என்று அறிவிக்காததால் எம். ஜி. ஆர். ரசிகர்கள் நேற்று அதிகம் பாடுபட்டுவிட்டார்கள்.

நேற்று நகரின் பல பகுதிகளிலும் ஓடிய கார்களில் தி. மு. க. கொடிகள் பறந்துகொண்டிருந்தன. சில கடைகளிலும் இக்கொடிகளைக் காணக்

(6-ம் பக்கம் பார்க்க)

ரொடீஷியா

# சுதந்திரப் பிரகடனம் தாமதிக்கும்?

## பிரதமர் வில்ஸன் ரொடீஷியா விஜயம்; நல்ல பலனளிக்கும் என நம்பிக்கை

லண்டன், அக். 24

ரொடீஷியா விவகாரம் குறித்து பேச்சுக்கள் நடத்தும் பொருட்டு பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்ஸன் இன்று ஸாலிஸ்பரிக்குப் புறப்பட்டார். நாளை அவர் ரொடீஷியப் பிரதமர் ஸ்மித்துடனும் மற்றும் பல தலைவர்களுடனும் பேச்சுக்கள் நடத்துவார்.

இதற்கிடையே, தாம் சுதந்திரப் பிரகடனம் குறித்து பிரதமர் வில்ஸனுடன் பேசப்போவதில்லையென்றும் 1961-ம் ஆண்டு அரசியல் அமைப்புத் திட்டத்தின் சுதந்திரம் பற்றியே பேசப்போவதாகவும் திரு. ஸ்மித் தெரிவித்துள்ளார்.



பிரிட்டிஷ் பிரதமரின் விஜயத்தின்மூலம் ரொடீஷியாவின்நெருக்கடியில் ஒருமாற்றம் ஏற்படலாம் என்றும் சுதந்திரப் பிரகடனத்தை ரொடீஷியப் பிரதமர் திரு. ஸ்மித் தாமதிக்கலாம் என்றும் பார்வையாளர்கள் இங்கு கருதுகின்றனர்.

1961-ம் ஆண்டு அரசியல் அமைப்புத் திட்டத்தின்கீழ், நாற்பது லட்சம் ஆபிரிக்கர்களுக்கு அளிக்கவிருக்கும் உத்தரவாதம் குறித்து பிரிட்டிஷ் பிரதமருடன் விளக்கமாக தாம் பேசப்போவதாகவும் திரு. ஸ்மித் தெரிவித்துள்ளார்.

ரொடீஷியப் பிரதமர் சுதந்திரப் பிரகடனம் செய்தால் அங்கு இரத்தக் களரி ஏற்படுமென்று ஸாம்பியா அதிபர் எச்சரித்துள்ளார்.

## யுத்தம் வேண்டாம்
### ராதாகிருஷ்ணனின் ஐ. நா. செய்தி

புதுடில்லி, அக். 24

''அணு ஆயுதப் போர் மூளாததற்கு ஐ. நா. உலக ஸ்தாபனம்தான் காரணம். உலகில் போர் ஏற்படக்கூடாது. அமைதி வழியிலேயே நாடுகள் நாட்டம் கொள்ளவேண்டும்'' என்று இந்திய ஜனாதிபதி டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் ஐக்கியநாடுகள் தினம் குறித்து விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.

''ஐக்கிய நாடுகள் சபை உலகின் அமைதியைக் கட்டிக்காத்து வருகிறது. கடந்த இருபது ஆண்டுகளில் ஐ. நா. ஸ்தாபனம் கணிசமான அளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறது. இந்த முன்னேற்றம் உலகின் அமைதிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். வல்லரசுகளின் கருவியாக மாருமல் ஐ. நா. இருந்துவரவேண்டும். அப்பொழுதுதான் மற்றய சிறிய நாடுகள் பத்திரமாக இருக்க முடியும். நாடுகளிடம் போர் ஆயுதங்கள் இருக்கக் கூடாது. ஆனல் தற்பாதுகாப்புக்காக ஆயுதங்கள் வைத்திருப்பதையும் தவருகக் கணிக்க முடியாது'' என்றும் டாக்டர் ராதாகிருஷணன் கூறினர்.

## ''ஆர்ப்பாட்டக்காரர்கள் சுடப்படுவார்கள்''
### சீன, கம்யூனிஸ் எதிர்ப்பு வேண்டாம் என சுகர்ணே கோரிக்கை

ஜாகர்த்தா, அக். 26

சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் கம்யூனிஸ எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் கைவிடுமாறு இந்தோனேஷிய மக்களை அதிபர் சுகர்ணே கேட்டுள்ளார்.

ஒருவருக்கொருவர் சண்டைசெய்ய வேண்டாமென்றும் அதிபர் சுகர்ணே தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்ருல் அது நாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமது கோரிக்கையைமீறி யாரும் ஆர்ப்பாட்டங்கள் நடத்திஞல் அவர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்படுவார்களென்றும் அதிபர் சுகர்ணே எச்சரித்துள்ளார்.

## தொழிற் கல்வியில் அதிக கவனம் செலுத்துக
### மாணவருக்கு புத்திமதி

உடுப்பிட்டி, ஞாயிறு

பாடசாலைகளில் தொழிற் கல்வி போதிக்கப்படுவதன் மூலம்உச்சகட்டத்தில் இருக்கும் வேலையில்லாத் திண்டாத்தை ஓரளவு குறைக்க முடியும். இளமை எதையும் பழகுவதற்கு ஏற்ற காலம். இளமையிலே மாணவர்கள் சிறு கைத்தொழில்களைப் பழகிவிட்டால் பின்னர் எதிர்கால வாழ்க்கையில் உழைப்பைத் தேடிக்கொள்ள இலகுவாக இருக்கும். யாழ்ப்பாணத்தில் இன்று வெங்காயக் கூடைகளுக்கு கிராக்கி அதிகரித்துள்ளது. மாதமொன்றுக்கு பல்லாயிரக்கணக்கானவெங்காயக் கூடைகள் தேவைப்படுகின்றன. கல்லூரிகளில் வெங்காயக்கூடை பின்னும் வகுப்புகள் நடத்தப்பட வேண்டும். இச்சிறு கைத்தொழில்மூலம் நாளொன்றுக்குப் பன்னிரண்டு ரூபாய் வரையில் உழைக்கலாம்'' என்று வலிகாமம் வடக்கு காரியாதிகாரிதிரு டி. முருகேசம்பிள்ளை தையிட்டி சிவகுருநாத வித்தியாசாலையில் நடைபெற்ற பெற்ருேர்தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசுகையில் கூறினர்.

கல்விப் பரிசோதகர் திரு. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றஇவ்வைபத்தில் காரியாதிகாரி திரு. முருகேசம்பிள்ளை தொடர்ந்து கூறியதாவது:—நெசவுத்தொழிலும் ஒரு சிறந்த கைத்தொழிலே. தையிட்டியில் நெசவுசாலையொன்று கட்டப்பட்டுவருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். இத்தொழிற்சாலை அபிவிருத்திக்கு இப்பகுதி மக்கள் போதிய ஆதரவு கொடுத்து மாணவிகளையும் ஊக்குவிக்கவேண்டும். இந்த நெசவுசாலைக் கட்டடவேலை முடிந்ததும் கட்டாயமாக இப்பகுதிப் பெண்களில் பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.''

மாணவ மாணவிகளின் நடனம், நாடகம் முதலிய கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. தலைமையதிதி யார் திரு. ஆ. சின்னப்பு நன்றி தெரிவித்தார்.

## சிரமதானம்

உடுப்பிட்டி, ஞாயிறு

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இரட்டைத்தட்டு பஸ் ஓடுவதற்குத் தடையாக மந்திகை அரசினர் ஆஸ்பத்திரிக்கு அண்மையிலுள்ள தெருமூடி மடத்தை உயர்த்திக் கட்டிப் பாதைகளைச் செம்மையாக்கும் சிரமதானப் பணி ஆரம்பமாகியுள்ளது.

## ''ஆக்கிரமிப்பாளர் யார்?''
### ஐ. நா. வின் புதிய சட்டம் விடைகூறவேண்டுமென்கிருர் சாஸ்திரி

புதுடில்லி, அக். 24

பாகிஸ்தானின் கோரிக்கையைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் புதிய கூட்டமொன்று கூட்டப்பட்டால் ஆக்கிரமிப்பு செய்தவர் யார் என்பதை அக்கூட்டம் தீர்மானிக்கக் கூடியதாகவிருக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் இன்று மாலை நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் உரைநிகழ்த்துகையில்தான் மேற்கண்டவாறுகூறினர்.



''இப்படியான கூட்டத்தை ஐ. நா. ஏன் கூட்டுகிறதென்பது எமக்கு சரியாகத் தெரியவில்லை. ஆனல் எமது கோரிக்கைகளையும் தீர்க்கக் கூடியதாக அது இருக்க வேண்டும். இந்திய—பாகிஸ்தான் நெருக்கடி எப்படித் தோன்றியது' ஆக்கிரமிப்புச் செய்தவர்கள் யார் என்பதையெல்லாம்ஐ. நா. வின் புதிய கூட்டம் தீர்மானிக்கக்கூடியதாக இருக்கவேண்டும். இதைவிட்டு ஆக்கிரமிப்பாளர்களை ஊக்குவிப்பதாக இக்கூட்டம் அமையக் கூடாது'' என்றும் பிரதமர் சாஸ்திரி கூறினர்.

''பாகிஸ்தான் பிரதேசம் எதையும் இந்தியா வைத்துக்கொள்ள விரும்பவில்லை. அதன் பிரதேசம் எதுவும் எமக்குத் தேவையில்லை. ஆனல் பாகிஸ்தான்இப்பொழுது சண்டை நிறுத்தத்தை பலதடவைகள் மீறி வருகிறது. சண்டைநிறுத்தம் முதலில்பூரணமாக அமுல் நடத்தப்பட்டபின்னரே மற்றைய விஷயங்களை நாம் ஆராய முடியும்'' என்றும் அவர் கூறினர்.

## சர்வதேச பொருளாதார ஒத்துழைப்பு

லயிப்சிக், அக். 24

இரு வாரங்களுக்கு முன்பு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் லயிப்சிக்கில் நடைபெற்ற சர்வதேச வர்த்தகச் சந்தையைத் திறந்து வைத்து பேசிய உதவிப் பிரதமர் திரு. ஜூலியஸ் போல்கோல் சர்வதேசப் பொருளாதார ஒத்துழைப்பு அவசியமென்று வற்புறுத்திஞர். சமத்துவம், பரஸ்பர நன்மை, உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமை என்ற அடிப்படையிலே இந்த ஒத்துழைப்பு ஏற்படவேண்டுமென அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

''அறச்செயல் புரிவானை அனைவரும் நேசிப்பர்; அவனது நட்பைப் பெரிதென மதிப்பர்; இறக்கும் சமயம் அவனது நெஞ்சம் அமைதியுற்றிருக்கும்; ஆனந்தம் நிரம்பியிருக்கும்; ஏனெனில் அவன் முன்பு நிகழ்ந்தற்காகப் பின்பு வருந்தான்''.

—புத்தர்


# ஈழநாடு

ELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஐப்பசி மீ 9 உ (25-10-65


## ஒருமுகப்படுத்தும் கைத்தொழில்

இந்நாட்டில் கைத்தொழில்களை ஒழுங்கு செய்து ஒருமுகப் படுத்தும் பொருட்டு புதிய மசோதாவொன்றை கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் விரைவில் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கவிருக்கிருராம். கைத்தொழில் வளர்ச்சிக்குஇது அவசியமாகும்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும், அந்நிய செலாவணியை மிச்சப் படுத்துவதற்கும் கைத்தொழில் விருத்தி பெறவேண்டும். முன்னைய அரசாங்கம் உள்நர்ட்டுப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் உள் நாட்டில் கைத்தொழில் வளர்ச்சியடைவதற்கும் ஊக்கமளிக்கும் பொருட்டு வெளிநாட்டிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்வதற்கு கட்டுப்பாடுகள் விதித்தது. ஆனல் உள்நாட்டில் கைத்தொழில்களை ஒருமுகப் படுத்தவும் ஒழுங்கு படுத்தவும் தவறியதால் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படாத அத்தியாவசியப் பொருட்களையும் கூட இறக்குமதி செய்வதற்குத் தடைவிதிக்கப்பட்டது. இதனல் உள்நாட்டில் அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதுடன் பதுக்கல், கொள்ளை லாபம், கள்ளக்கடத்தல் ஆகியவைகளுக்கும் இடமளிக்க நேரிட்டது, உள் நாட்டில் கைத்தொழில்களை ஒழுங்குபடுத்தத்தவறியதால் சில பண்டங்களின் உற்பத்தி அதிகரித்தும் அத்தியாவசியத் தேவையான பொருள்களின் உற்பத்தியில் அக்கறைசெலுத்தப்படாமலுமிருந்தது.

கைத்தொழில் அபிவிருத்தியை முக்கிய நோக்கமாகக் கொண்டு தனியார்துறைக் கைத்தொழில் பகுதி இப்பொழுது திருத்தியமைக்கப்பட்டுவருகிறதாம். சகல தனியார் துறைக் கைத்தொழில்கள் அனைத்தும் ஒன்பது பிரிவுகளாகப்பிரிக்கப்படுவதாகவும், திருத்தியமைக்கப்பட்ட புதிய திட்டத்தின் அடிப்படையிலேயே கைத்தொழில்களுக்குப் புதிய லைசன்ஸ்கள் வழங்கப்படுமெனவும் தெரியவருகிறது. இது வரவேற்க வேண்டிய திட்டமாகும். ஒருவர் ஆரம்பித்த தொழிலையே மற்றவரும் பின்பற்றி அதற்குப் போட்டியாக ஆரம்பிப்பதுதான் இங்கு பொதுவாக இருந்துவரும் பழக்கம். அமைச்சரின் திட்டப்படி கைத்தொழில் துறை பிரிக்கப்பட்டால் நாட்டின் அத்தியாவசிய தேவைப் பொருள்களின் உற்பத்தி அதிகரிக்கவும் சுயதேவை பூர்த்தியடையவும் வாய்ப்புக் கிடைக்கும். ஒரு தொழிலில் பலர் ஈடுபடுவதையும் பல பொருள்களின் உற்பத்தியில் ஒரு சிலர் ஏகபோக உரிமை கொண்டாடுவதையும் இத்திட்டம் மாற்றியமைத்துப் புதிய புதிய கைத்தொழில்களில் ஈடுபடவும் உற்பத்தியைப் பெருக்கவும் கூட அமைச்சரின் இத்திட்டம் உதவி செய்யும் என்று எதிர்பார்க்கலாம்.

## யாழ்ப்பாணம் பஸ் நிலையம்

யாழ்ப்பாணப் பகுதியில் மழைகாலம் ஆரம்பித்துவிட்டது. யாழ்ப்பாணம் பஸ்நிலையம், வீதிகளின் சீர்கேடு பற்றிப் புதிதாக எதுவும் சொல்வதற்கில்லை. மக்களின் கஷ்டத்தை மாநகர சபையார் என்றுதான் உணர்வார்களோ?

ஒருநேரம் மழைபெய்தாலே யாழ்பாணம் பஸ் நிலையத்தில் பிரயாணிகளும், பொதுமக்களும் படும் கஷ்டம் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. ஒருநாள் முழுவதும் மழைவிடாமல் பெய்வதானல் அவர்களின் நிலை என்ன? நேற்று முழுவதும் யாழ்ப்பாணத்தில் அடைமழை பெய்தது. புதிய பஸ்நிலையம் அமைப்பதற்கு எத்தனையோ இடங்களைப் பரிசீலனை செய்கின்றனர். ஆனல் பஸ்நிலையம் மட்டும் சீர்கெட்ட நிலையிலேயே இருந்துவருகிறது. பஸ்நிலையம் இருந்த இடத்தில் மாதிரிச்சந்தை அமைக்கஅத்திவாரமிடப்பட்டது. அதுவும் அரைகுறையாகவே இருக்கின்றது.

யாழ்ப்பாண நகர வீதிகளில் மழைத்தண்ணீர் தேங்கிச் சேறும் சகதியுமாகவே காட்சியளிக்கின்றன. வடிகால்வாய்கள் இல்லை. இருக்கும் சில கால்வாய்கள்கூட ஒழுங்கான முறையில் இல்லை. இதுவும் பழைய விஷயம் தான். பஸ்நிலையம் பற்றியும், வீதிகளின் நிலைபற்றியும் நாம் மட்டுமல்ல, பலரும் பலதடவைகளிலும் சுட்டிக்காட்டியும் நிலைமை மட்டும் சீராகவில்லை. இனியும்கூட நமது மாநகரசபை இவ் விஷயத்தில் தாமதம் செய்வது யாழ்ப்பாண நகருக்கோ அவர்களுக்கோ நல்லதல்ல. பஸ் நிலையப்பிரச்னைக்கு விரைவில் ஒரு முடிவுகாண வேண்டும். இல்லையேல் இப்பொழுதுள்ள பஸ்நிலையத்திலாவது பிரயாணிகளுக்குக் குறிப்பாக இந்த மழைகாலத்திலாவது தகுந்த வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். மாநகரசபையினருக்கு, மட்டுமல்ல, இலங்கைப் போக்குவரத்துச் சபையினருக்கும் இதில் பொறுப்புண்டு.

## ஐ. நா. தினம்

உடுப்பிட்டி, ஞாயிறு

ஐக்கியநாடுகள் சபையின் 20-வது ஆண்டு தினத்தை புதன்கிழமை கொண்டாடுவதென நெல்லியடி ஐக்கிய கலாசாலை மாணவர் மன்றம் தீர்மானித்துள்ளது. நெல்லியடியைச் சேர்ந்த சமாதான நீதிபதி திரு. எஸ். சபாரத்தினம் தலைமையில் இவ்விழா நடைபெறும்.

# சிறுவர் நூல்நிலையம் அமைப்பதன் அவசியம்

(யாழ்ப்பாணம்பொது நூல் நிலையத்தில் சிறுவர் நூல் நிலையப் பிரிவு ஒன்றை அமைப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிறுவர் நூல் நிலையத்தின் அத்தியாவசியம் பற்றியாழ். நூல் நிலையப் பொறுப்பாளர் திரு. வே. இ. பாக்கியநாதன் மாநகரசபைக்குச் சமர்ப்பித்த அறிக்கை இது).

இளஞ்சிறுவர்களின் உள்ளங்களைப் பக்குவப்படுத்தி, வயது முதிர்ந்தவர்களின் அனுபவங்களை அவர்கள் மனதில் புகுத்துவது தான் குழந்தைகள் நூல்நிலையத்தின் தலையாய கடனாகும். இவர்களைக் காலகிரமத்தில் வளர்ந்த வாசகர்களாக உருவாகிருர்கள். இளமையிற் கல்வி சிலையின் எழுத்து என்பதற்கிணங்க அவர்களது களங்கமற்ற பிஞ்சு உள்ளங்களிலே ஏற்படுகின்ற மாசற்ற கருத்துக்கள், கொள்கைகள் தான் அவர்கள் முதியவர்களானதும் வலுப்பெறுகின்றன.

வளர்ந்தவர்களைப் போலல்லாது சிறுவர்கள் உளவர்ச்சியில் யாவரும் சரிசமமான நிலைமையை ஒரே தருணத்தில் அடைவதில்லை. குறிப்பிட்ட சில பருவங்களை அவர்கள் கடந்து செல்கிருர்கள். பாலப்பருவம், ஆரம்ப பாடசாலை நாட்கள், காளைப்பருவம், காளைப்பருவத்திற்கு முந்திய இடைக்காலம். இவை யாவர்க்கும் எப்பொழுதும் சரியாக அமைவதில்லை. அவர்களின் பழக்கவழக்கங்களில், செய்கை முறைகளில், அக்கறைகளில் குறிப்பிட்க்கூடிய வித்தியாசமான பேதங்கள் இருப்பதைக் காணலாம். இவ்வருடங்களே குழந்தைகளின் முக்கிய பருவகாலமாகும். இந்த வயதில் அவர்கள் மனதில் ஏற்படும் எந்த ஒரு மாறுதலும் பசுமரத்தாணிபோல ஆழப்பதிந்துவிடுகிறது. இந்த ஒரு தருணத்தில் நன்மைபயக்கக்கூடிய நூல்நிலையத் தொடர்பை அவர்கள்மனதில்ஏற்படுத்தத் தவறுவோமாகில் வாழ்க்கையின்பிற்காலத்தில் வாசிப்பினுல் அடையக்கூடிய நன்மைகளை அடையமாட்டார்கள். 'தகுந்த தருணத்தில், தகுந்த புத்தகத்தை, தகுந்த வயதினரிடம் கொடுப்பதுதான் நூல் நிலையத்தினது கடமையாகும். அப்படிக்கொடுக்கத் தவறுவதனுற்ருன் தரம் கெட்ட நூல்களையும், துன்மார்க்கம் மிகுந்த, கெடுதல் உண்டாக்கக்கூடிய பயங்கரமர்ம நூல்களையும் வாசிக்க வசதியளிக்கின்றது. வெள்ளம் வருமுன்னே அணைபோடுவது போன்று சிறுவர்கள் எத்தகைய புத்தகங்களைப் படிக்க வேண்டுமென்று நாம் விரும்புகிருேமோ அத்தகைய புத்தகங்களை வைத்து சிறுவர் நூல்நிலையத்தை மதுநூலகத்தில்ஏற்படுத்துவதன்மூலம் இதைத் திறம்படச்செயலாற்றலாம்.

எமது நூல்நிலையத்தில் சிறுவர் பிரிவொன்றினை ஆரம்பிப்பதற்கு வேண்டப்படும் குறைந்தபட்ச தேவைகள் எவை என்பதை இங்கு ஆராய்வது சாலப்பொருத்தமாகும். மற்றைய முயற்சிகளைப்போன்று நிதி, இடவசதி, உத்தியோகத்தர்கள், சிறுவர்கள் ஆகியோர் இதில் சம்பந்தப்படுகின்றனர்.

நிதி யாவற்றிற்கும் ஆணிவேர் போன்றது. அது இன்றேல் அணுவும் அசையாதது போல இப்பிரிவை ஆரம்பிப்பதற்கு ரூபா 25,000/-. எமக்குச் செலவாகும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள் நூல்நிலையம் அவர்களுக்கென ரம்மியமாய் அமைய வேண்டும். அப்படி இருந்தால் தான் குழந்தைகள் அங்கு வந்து தங்கள் பொன்னன காலத்தை நன்முறையில் பயன்படுத்துவார்கள். இது நூல்நிலையத்தின் பெருப்பம், ஒழுங்குமுறை, தளபாடங்கள், அலங்காரங்கள்ஆகியவற்றைப் பொறுத்திருக்கிறது. இப்படியான சூழ்நிலையில் தான் நூல் நிலைய சிநேகபாவமும் சௌகரியமும் மனதைக் கவரும் கவர்ச்சியும் ஏற்படும். நாம் எதைத் தொடங்கிலும் வருங் காலத்தை மனதில் கொண்டே செயலாற்ற வேண்டும். தளபாடங்கள் புத்தக ராக்கைகள், புத்தகங்கள் ஆகியதற்றிற்கே பணம் முக்கியமாகத் தேவைப்படுகிறது. உடனுதவு புத்தகங்கள், வீட்டிற்கெடுத்துச் செல்லும் புத்தகங்கள், பாடப்புத்தகங்கள் தொடக்கத்தில் வாங்கப்பட வேண்டும். இச்செலவுகளை நாம் தொடக்கத்தில் நிவர்த்தி செய்தால் வருங் காலத்தில் இப்பணத்தின் தொகையைக் குறைக்கக் கூடியதாக இருக்கும். இப்பணத்தை நாம் பெறுவதற்கு முயற்சி எடுத்தால் சிறுவர் நூல்நிலையத்தை ஏற்படுத்த எமக்கு அதிக சிரமம் இருக்காது. பொதுமக்களுக்கான சேவையில் சிறுவர்கட்கும் சேவை செய்கிருேம் என்ற பெருமையும் எம்மைச்சாரும்.

### இடவசதி

இந்த விடயத்தில் நாம் அதிஷ்டசாலிகள் என்றே கூறவேண்டும். கீழ்மாடியின் வடபகுதியின் கிழக்குப் பகுதியில் இருக்கும் உடனுதவு பகுதியை மேல்மாடியின் தென்பகுதியின் கிழக்குப்பக்கமாக அமைத்தோமானல் எமக்கு 70, 15, 1050 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட இடம் கிடைக்கும். இதில் சிறுவர் பகுதியை தாராளமாகவும், வசதியாகவும் அமைத்துக்கொள்ளலாம்.

### உத்தியோகத்தர்

புத்தகங்களின் சேர்க்கை மட்டும் நூல்நிலையமாகாது. பயன்தரக்கூடிய முறையில் அவற்றைப் பாவிக்காவிடின் எக்காரணத்துக்காக அவை ஒன்று சேர்க்கப்பட்டனவோ அதன் நோக்கத்தையே தோற்கடிப்பதாக இது அமைந்துவிடும், சிறுவர் நூல்நிலையத்தின் வெற்றியும் தோல்வியும் சிறுவர் நூல் நிலையத்தை நிர்வகிப்பவரின் தகைமையிலே பொறுத்திருப்பதால் தராதரம் பெற்ற ஒருவரால் மட்டுமே அவ் வேலையைத் திறம்படச்செயலாற்ற முடியும். நூல்நிலையப் பொறுப்பாளருக்கு வேண்டப்படும்தகைமைகள் நன்கு கவனிக்கப்படவேண்டும். ஆண்களிலும் பார்க்கப் பெண்களே இப்பதவிக்குப் பொருத்தமானவர்களாக இருப்பதால் வெளிநாடுகளில் சிறுவர் நூல்நிலையப் பொறுப்பை பெண்களே பொறுப்பெற்று நடாத்துகிருர்கள்.

அன்பும் பண்பும் உரிய அவர்களது மனே நிலைமை காரணமாகவும், சிறுவரது வெறுப்பு, விருப்புக்களை அறியும் ஆற்றலுடையவர்களானபடியினுலும், பெண்களுக்கே உரித்தான பிறசிறப்புக் குணங்களினுலும் இப்பதவிக்குப் பெண்களே பெரிதும் விரும்பப்படுகின்றனர். சிறுவர் நூல் நிலையப் பொறுப்பாளருடன் உதவி செய்ய ஒரு அலுவலகத் தொழிலாளியையும் நியமித்தால் ஊழியர்பற்றிய பிரச்னை தீர்ந்துவிடும்.

### புத்தகங்கள்

புத்தகங்கள் பல நோக்கங்கட்காகத் தேவைப்படுகின்றன. வீட்டில் படிப்பதற்கு இரவல் பெற்றுச் செல்லக்கூடிய புத்தகங்கள், நூல் நிலையத்தில் வைத்து உடனுதவும் புத்தகங்கள், அறிவையும் ஆவலையும் பூர்த்தி செய்யக்கூடிய உடனுதவு

(6-ம் பக்கம் பார்க்க)

## நாட்டிலும் நகரிலும்

நேற்று முழுநாளும் யாழ்ப்பாணத்தில் மழை கொட்டு கொட்டென்று கொட்டியது. பொழுது விடிந்தது கூடப் பலருக்குத் தெரியாது. வெய்யிலின் அகோரத்தைத் தாங்கமுடியாது கஷ்டப்பட்ட யாழ்ப்பாண மக்களுக்கு''இப்படி மழை கொட்டுகிறதே. ஒரு அலுவலும் பார்க்கமுடியவில்லையே'' என்றகவலை.

'எம். ஜி. ஆரை எப்படிப் பார்க்கிறது. மழை இப்பதானு இப்படிக் கொட்ட வேண்டும்' என்றகவலை எம். ஜி. யார்ப் பிரியர்களுக்கு! தீபாவளிப் பண்டிகையோடு எம். ஜி. யாரின் வருகையும் சேர்ந்ததால் யாழ்ப்பாணத்திலுள்ள பலஹோட் ல்களிலும் சாப்பாடு கிடைக்கவில்லையாம். தீபாவளிப் பட்சணங்கள்தான் கிடைத்தன. சாப்பாடு திருப்தியாகக் கிடைக்கவில்லை என்கிருர் ஹோட்டலையே நம்பியிருக்கும் ஒரு நண்பர். பாவம்!

ஃ ஃ ஃ

தீபாவளியென்ருல் தீப ஒளித் திருநாள் என்று ஓர் அர்த்தம். யாழ்ப்பாண நகரம் இந்தமங்கலமான தினத்தில் சிலமணி நேரம் இருளில்மூழ்கியிருந்ததைப்பற்றி என்ன சொல்வது? தீபாவளி, புதுவருஷம்போன்ற பண்டிகை காலங்களில் யாழ் நகரில் மின்சாரக்கோளாறு ஏற்படுவதும் சிலசிலபகுதிகளில் திடீர்திடீரென ஒளி நீங்கி இருழ்சூழ்வதும் வழக்கம். அதென்ன கோளாருே தெரியவில்லை! தீபாவளித் திருநாளில்கூட்வா யாழ்ப்பாணத்தில் இருழ் சூழவேண்டும். அடகர்மமே.

ஒரு சந்தோஷச் செய்தி. இம்முறை தீபாவளிக் கொண்டாட்டம் மிக அமைதியாக இருந்ததாம். அதாவது வழக்கம் போல் அடிதடி சண்டைகள் பெரிய அளவில் எதுவும் நடைபெறவில்லையாம். யாழ்ப்பாணம் பொலிசிலும் புகார் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலும் டாக்டர்களுக்கும் ஊழியர்களுக்கும் இம்முறை அதிக வேலையில்லை!

ஃ ஃ ஃ

தனக்கும்சிவாஜிக்கும் எவ்விதபகையும் கிடையாதென்றும் இருவருக்குமிடையில் தொழிலில் போட்டியுண்டென்றும் எம். ஜி. ஆர். தெரிவித்திருக்கிருர். தமிழ் நாட்டில் எம். ஜி. ஆர்.—சிவாஜி கோஷ்டிகள் அதிகம். இதனுல் மோதல்களும் ஏற்படுவதுண்டு. சுவரொட்டி விளம்பரங்களும்கூட படாதபாடுபடும்! இங்கும் சிவாஜி-எம். ஜி. ஆர். அனுதாபிகள், ஆதரவாளர்கள், அபிமானிகள் இருப்பினும் அங்குள்ளதைப் போன்று 'தீவிர' போட்டி இல்லை. இங்கும் சிலசமயங்களில்சுவரொட்டி விளம்பரங்களை 'சாணம்' அழகுபடுத்தும் காட்சிகள் தென்படுகின்றன. இந்த 'வியாதி' பரவவில்லை. நல்லகாலம் சிவாஜியுடன் தனக்குப்பகைஇல்லை என்று எம். ஜி. ஆர். இங்கு தெளிவாகக் கூறியிருப்பதால் அபிமானிகளுக்கிடையில்இனிகோஷ்டி பூசல் தோன்ருதென்று எதிர்பார்க்கலாம்!

- ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போர் நிறுத்தம்பின்னர்

# 30 கிராமங்கள் பாக். வசமாகின

புதுடில்லி, அக், 28
போர்நிறுத்தம் ஏற்பட்டதற்குப் பின்னர் பஷில் கா பகுதியில் முப்பது சிறிய கிராமங்கள் பாகிஸ்தான் வசமாகியுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட கிராமங்களில் இவர்கள் பலவிதமான அட்டூழியங்கள் நடத்தி வருகின்றனர் என்றும் வீடுகளுக்கு தீவைப்பதும் பொதுமக்களின் சொத்துக்களை அபகரிப்பதுமே பாகிஸ்தானியர் தினம்நடத்தும் ''வேலை''கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானிய துருப்புகளின் இந்தவிதமான நடவடிக்கைகளினுல் பதினெராயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இவர்களுக்கு இந்திய அரசாங்கம் இப்பொழுது இலவச அரிசி வழங்கிவருகிறது என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்தோனேஷியாவில்

# கம்யூனிஸ்ட் எம். பி. க்கள் தடை செய்யப்பட்டனர்

ஜாகர்த்தா, அக். 23
இந்தோனேஷியாவில் சகல கம்யூனிஸ்ட் எம். பி.க்களும் தற்காலிகமாகத் தடைசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பார்லிமெண்டுக்கு வரமுடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது

இதேமாதிரி சட்டசபையில் அங்கம் வகிக்கும் கம்யூனிஸ்ட் அங்கத்தவர்களுக்கும் இப்படியான தடை உத்தரவுகள் விதிக்கப்பட்டுள்ளன.

## ராஜினமா

அங்காரா, அக். 24
துருக்கிப் பிரதமர் திரு. யோற் ஹெறி உர்குப் லு தமது மந்திரிசபையின் ராஜினமாக் கடிதத்தை அதியர் சீமெல் கேர்செஸல்லிடம் சமர்ப்பித்துள்ளார். அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இவரது கட்சி படுதோல் யடைந்திருந்தது. (பி. டி. ஐ.)

# ஹாஜிபீர் பகுதியில் காஷ்மீர் சிவில் நிர்வாகம்

ஸ்ரீநகர், அக். 24
காஷ்மீர் அரசாங்கம் தனது சிவில் நிர்வாகத்தை ஹாஜிபீர் பகுதிக்கும் விஸ்தரித்துள்ளது. இப்பகுதியை அண்மையில் இந்தியத்துருப்புகள் கைப்பற்றியிருந்தனர்.

இப்பகுதியில் மொத்தமாக நூறு கிராமங்கள் இருக்கின்றன. வடபகுதியில் 15 கிராமங்களும் தென்பகுதியில் 85 கிராமங்களும் உள்ளன. இந்தக் கிராமங்களின் ஜனத்தொகை 15,000 ஆகும்.

இப்பகுதியில் சேவை புரிய ஒரு உதவிக் கமிஷனர், ஒரு தாஸில்தார், ஐந்துவருமான வரி அதிகாரிகள் உட்படப் பல அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். (பி. டி. ஐ.)

## வடவியட்நாமுக்கு மேற்கு ஜெர்மன்படை

பொன், அக். 24
மேற்கு ஜெர்மன் விமானப்படையைச்சே ந்த 120 ராணுவ வீரர்கள் ஆறு மாதங்கள் அமெரிக்காவில் பயிற்சி அளிக்கப்பட்டு வியட்நாமுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களில் ஆறு பேர் கொல்லப்பட்டனர் 13 பேர் காயமடைந்தனர், இருவர் காணமற் போய்விட்டனர். கடந்த ஜூன் மாதத்தில் மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த மற்ருெரு பட்டாளம் வியட்நாமுக்கு அனுப்பப்பட்டது.

1964-ம் ஆண்டு மத்தியில் அமெரிக்காப் பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாராவும், தற்போது தெற்கு வியட்நாமில் அமெரிக்கத் தூதுவராகவிருக்கும் திரு. காபொட் லாஜ்ஜும் மேற்கு ஜெர்மனிக்கு வந்து பேச்சுவார்த்தைகள் நடத்தி மேற்கு ஜெர்மன் ராணுவ வீரர்களைத் தென் வியட்நாமுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

## பெண்ணின் உலக சாதனை

சென்செபஸ்தியன், அக். 24
ஸ்பெயினில் சென்செபஸ்தியான் என்னும் இடத்தில் உலக சைக்கிள் வீரரைத் தெரிவு செய்வதற்காக நடந்த சைக்கிள் ஓட்டப்போட்டியில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசைச் சேர்ந்த எலிஸபெத் எயிக்ஹெல்ஸ் என்பவர் உலக சைக்கிள் ஓட்ட வீரப் பெண்மணியாகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் 52 கிலோ மீட்டர் தூரத்தை 1 மணி 34 நிமிடம் 04 விநாடியில் கடந்தார். இது ஒரு மாபெரும் வெற்றியாகும்.

செல்வி எலிஸபெத் தையல் தொழிலில் ஈடுபட்டுள்ளவர். ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் ''உலக சைக்கிள் ஓட்டவீரர்'' என்ற விருதாவளியைப் பெற்ற ஒரே பெண்மணி அவரே.

## ''சந்திரனில் இறங்கவேண்டும்''

கேப்கென்னடி, புளோரிடா, அக் 23
சந்திரனில் இறங்குவது தான் தனது பிரதான நோக்கம் என்றும் இந்த விருப்பம் நிறைவேற அமெரிக்க விஞ்ஞானிகள் தன்னை அங்கு அனுப்பவேண்டும் என்றும் அமெரிக்க விண்வெளிப் பிரயாணி காப்டன் வோல்டர் ஸ்கிர்ரா தெரிவித்துள்ளார். நாளை திங்கட்கிழமை இவர் தனது இரண்டாவது விண்வெளி பிரயாணத்தை மேற்கொள்கிருர்.
(பி. டி. ஸி.)

## புதிய நியமனம்

பம்பலப்பிட்டி, ஞாயிறு
மேக்கண்டையில் கிறடிட் ஸ்தாபனத்தில் மனேஜராக கடமையாற்றும் திரு. டி. கே. சுப்பிரமணியம்மீன்பிடி கூட்டுறவு ஸ்தாபனத்தின் ஒரு அதிபராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

## சந்திப்பு

புதுடில்லி, அக். 23
இலங்கை [illegible] திரு. ஷேர்லி [illegible] நேற்று இந்திய வெளிவிவகார உதவி மந்திரி திரு. [illegible] சந்தித்தார்.
(பி. டி. ஐ.)

## இந்தியாவின் கருத்து

புதுடில்லி, அக். 23
திட்டமிட்டபடி ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டை நவம்பர் மாதம் ஐந்தாம் திகதி நடத்துவதையே இந்தியா விரும்புவதாக அல்ஜிரியாவுக்கு இந்தியா அறிவித்துள்ளது.

இது சம்பந்தமான இந்தியாவின் குறிப்பை அல்ஜிரிய தூதர் திரு. அலி லகாடரியிடம் இந்திய வெளிவிவகார காரியதரிசி திரு. சி. எஸ். ஜா நேற்றுக் கொடுத்தார். (பி. டி. ஐ.)

## காலமானர்

பிறிட்டோரியா, அக். 24
தென்னுபிரிக்கா மக்களினுல் பெரிதும் மதிக்கப்பட்டுவந்த ஒரு இந்தியரான மொகமட் யூசுப் நக்டி (107 வயது) நேற்று முன்தினம் இங்கு காலமானர். இவர், மகாத்மா காந்தியுடன் நெருங்கிய தொடபு கொண்டிருந்தார்.

ஒன்பது வாரங்களுக்கு முன்னர் இவரது மகன் யூசுப் நக்டி, ஜோகனர்ஸ் போக்கிலுள்ள வீட்டில் சுருக்கிட்டு தற்கொலை செய்தார். இவா 1964-ம் ஆண்டு அரசாங்க்த்தினுல் தடை செய்யப்பட்டிருந்தார்.

மைந்தனின் மரணத்தினுல் திரு. மொகமட் மனமுடைந்திருந்தாரென்று கூறப்படுகிறது. (பி. டி. ஐ.)

## அபேட்சார் தெரிவில் புதியமுறை

பம்பலப்பிட்டி, ஞாயிறு
ஐக்கியதேசியக் கட்சியின் சார்பில் ஸ்தலஸ்தாபனங்களுக்குபோட்டியிடும் அபேட்சகர்களை தெரிவு செய்வதற்காக நியமன பொதுச்சபை ஒன்றை ஐ. தே. க. நிர்வாகசபைதெரிவு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இச் சபையில் பிரதமர், ராஜாங்க மந்திரி, பல ஐ. தே. க. அங்கத்தவர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இதுவரை காலமும் மாவட்ட ரீதியிலேயே அபேட்சகர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

## பலபகுதிகளில் நல்ல மழை

கொழும்பு, ஞாயிறு
நாட்டின் பல பகுதிகளிலும் மழை தொடர்ந்து பெய்து வருவதாக காலநிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. மோதரை, அம்பலாங்கொடை, ட்டியாந் தோட்டை, உடுநுவர ஆகிய பகுதிகளில் சிறுவெள்ளம் ஏற்பட்டுள்ளது.

## ஐக்கியப்படுத்த ஒப்பந்தம்

பெர்லின், அக். 24
''இரு ஜெர்மன் ராஜ்யங்களிடையே ஏற்படும் ஒரு சமாதான ஒப்பந்தமே ஜெர்மன் மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடியது. இத்தகைய ஒப்பந்தம் ஜெர்மனியை ஐக்கியப்படுத்த உதவியாக இருக்கும்'' என்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் ஜனதிபதி கோல்டர் உல்பிறிச், குடியரசில் நிலச்சீர்திருத்தம் ஏற்பட்டு 20 ஆண்டு பூர்த்திவிழாக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

சமாதான ஒப்பந்தத்தை எதிர்ப்பவர்கள் ஜெர்மன் ஐக்கியத்தை எதிர்ப்பவர்களென்றும், இந்த ஒப்பந்தத்தால் முழு ஐரோப்பாவுக்கே பாதுகாப்பு ஏற்படுமென்றும் அவர் மேலும்தெரிவித்தார்.

# அல்ஜியர்ஸ் மகாநாடு திட்டமிட்டபடி நடக்கும்

அல்ஜியர்ஸ், அக். 23
ஆசிய ஆபிரிக்க மகாநாடு திட்டமிட்டபடி குறிப்பிட்ட திகதியில் நடைபெறும் என்று அல்ஜீரிய வெளிவிவகார மந்திரி அறிவித்துள்ளார்.

அல்ஜியர்ஸ் மகாநாட்டை ஒத்திவைப்பதில் சில நாடுகள் முயன்றுவந்த போதிலும் மகாநாட்டை ஒத்திவைக்கும் நோக்கம் தற்போதைக்குக் கிடையாது என்று கூறிய அவர், அல்ஜியர்ஸ் மகாநாடு அடுத்த மாதம் 5-ம் திகதி நிச்சயமாக நடைபெறும் என்று உறுதி தெரிவித்துள்ளார்.

மகாநாட்டை ஒத்திவைப்பதில் சீனுவும் பாகிஸ்தானும் முழு முயற்சி எடுத்து வருகிறது.

## வீரப்போர் நடத்திய பெண்

பொன், அக். 24
வடவியட்நாமின் 20வது ஆண்டுவிழாவை முன்னிட்டு 'பாம்-சாவோயின் இளம் பெண்' என்னும் திரைப்படம் பெர்லினில் திரையிடப்பட்டது. இப்படத்தை ஜெர்மன் மக்கள் பெரிதும் ரசித்தனர். வியட்நாமுக்கு எதிராகப் பிரெஞ்சு ஏகாதிபத்தி வாதிகள் யுத்தம் நடத்தியபோது ஒரு பெண்மணி நடத்திய வீரப் போராட்டத்தை இப்படம் சித்தரிக்கிறது. ஜெர்மன் ஜனநாயகக்குடியரசில்லயிப்சிக்நகரில்நடைபெற்ற சர்வதேச வர்த்தகச் சந்தையில் வியட்நாம் சினிமாப்பட வாரமொன்றும் கொண்டாடப்பட்டது.

## பத்திரிகையாளர் பயிற்சி

பெர்லின், அக். 24
பெர்லினிலுள்ள சர்வதேச பத்திரிகைத்தொழிற் பாடசாலையில் பயின்றுவந்த கானு, நைஜீரியா, சியரா, லியோன், கென்யா, உகண்டா சான்ஸிபார், சோமாலியா முதலிய நாடுகளைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் தங்களின் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறியுள்ளனர். இங்கு அவர்கள் பயிற்சிபெற்ற 10 மாத காலத்துள் பெர்லினில் பல்வேறு பத்திரிகாலயங்களில் ஆசிரியர் குழுவில் சேர்ந்து வேலைபார்த்தனர். சிறுசிறு மாதிரிப் பத்திரிகைகளை நடத்தினர். அச்சுத்தொழில் தட்டெழுத்து ஆகியவற்றிலும் பயிற்சிபெற்றனர். சர்வதேசப் பத்திரிகையாளர் பயிற்சிப் பாடசாலை 4 மாடிகளைக்கொண்ட கட்டிடத்தில் அமைந்துள்ளது. அதில் 70 வகுப்பறைகள் உண்டு.

கரணவாயில்

## ஜப்பானிய திரைப்படவிழா

உடுப்பிட்டி, ஞாயிறு
ஜப்பானிய தகவல்பகுதியினரின் இலவச திரைப்பட விழா கரணவாய் தெற்கு கலா படிப்பக மன்ற ஆதரவில் இம்மாதம் 31ந் தேதி சுமாமிநாதர் மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

## ஆண்டுவிழா

உடுப்பிட்டி, திங்கள்
கரவெட்டி கனுவில் சனசமூக நிலைய ஆண்டுவிழா இன்று திங்கட்கிழமை மேற்படி சனசமூகநிலைய முன்றலில் நடைபெறவிருக்கிறது. பிரதமபேச்சாளர்களாகதிருவாளர்கள் வ. பொன்னம்பலம், கே. மோதிலால்நேரு உட்படப் பலர் கலந்துகொள்கிருர்கள்.

## எச்சரிக்கை

லண்டன், அக், 24
கருத்திடை மாத்திரைகளை உபயோகிக்கும் பெண்களின் தலைமயிர் விரைவாக உதிர்ந்துவிடுகிறது என்று பிரிட்டிஷ் டாக்டர் ரேமண்ட் வல்லிங்ஸ் தெரிவித்துள்ளார்

பிரிட்டிஷ் வைத்திய சஞ்சிகையில் எழுதியுள்ள ஒரு கட்டுரையில், அதிகமான பெண்கள் மாத்திரைகளையே உபயோகிக்கின்றனர் என்றும் இதன் விளைவாக தலையில் வழுக்கை விழுகிறது என்றும் டாக்டர் வல்லிங்ஸ் தெரிவித்துள்ளார்.
(பி. டி. ஸி.)

## நூல்நிலையம் அன்பளிப்பு

டமாஸ்கஸ், அக். 24
ஸிரியாவிலுள்ள ஜெர்மன் ஜனநாயகச் குடியரசின் தூதர் திரு. எல்பிரெட் மார்டர் ஜெர்மன் இலக்கியங்களையும், தற்கால காவிய நூல்களையும் கொண்ட ஒரு சிறிய நூல்நிலையத்தை ஸிரியக் குடியரசின் கலாச்சார மந்திரியிடம் நன்கொடையாக வழங்கினுர். இச்சிறிய நூல்நிலையம் டமாஸ்கஸ் கலாச்சார நிலையத்தில் ஜெர்மன் மொழிஇலாகா ஒன்றை நிறுவ உதவுமென்றும் இதனுல் இரு நாட்டு மக்கள் இடையே நல்லுறவு வளர வடையுமென்றும் ஸிரியாவின் கலாச்சாரமந்திரி திரு. சுலைமான் அல்கோச் கூறினுர்.

## கந்தசஷ்டி விழா

சங்கானை, ஞாயிறு
சங்கானை வெல்வில் இலுப்பைத்தாழ் முருகமூர்த்தி கோவிலில் கந்தசஷ்டிவிழா நாளை திங்கட்கிழமை தொடக்கம் 6 நாட்களுக்கு நடைபெறும். சனிக்கிழமை சூரன்போரும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை திருக்கல்யாணமும் நடைபெறும்.

## ரண சிகிச்சைக்குப் பப்பாளி

லண்டன், அக். 24
கடும் தீப்புண்களுக்குச் சிகிச்சை அளிப்பதில் பாப்பாளிப்பழம் சிறந்த பலனளிப்பதாக தென்னுபிரிக்க டாக்டர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

தீப்புண்கள் ஏற்பட்ட இடத்தில் புதிய திசுக்களை ஓட்டவைப்பதானுல் புண்களிலுள்ள வேண்டாதபழைய திசுங்களை அகற்றியாகவேண்டும். அவற்றை அறுவைக் கருவிகளின் மூலம் அகற்றுவதென்பது சுலபமல்ல.

பப்பாளியைப் பயன்படுத்திக் கட்டுப்போட்டால் சில தினங்களில் வேண்டாத திசுக்கள் அதில் கரைந்து விடுகின்றன. சிதைந்த கட்டியான திசுக்களை பாப்பாளியிலுள்ள ''என்சைம்'' மிருதுவாக்கி கரையச்செய்கிறது.

கிருமியகற்றப்பட்ட கத்தி மூலம் பப்பாளிப்பழத்தின் தோலையும். சதைப் பற்றையும் வெட்டவேண்டும். அதைக் கவனமாகப் புண்களில் வைத்துக் கட்டவேண்டும். அது உலர்ந்துவிடுவதில்லை. இதமாகவுள்ளது. வைத்துக்கட்டுவதும் அகற்றுவதும் சுலபமானதுதான். அதன் மூலம் சிறந்த பலன்கள் கிடைக்கின்றன என்று அந்த டாக்டர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெற்றிதோல்வியில்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ். மத்தியகல்லூரி இரண்டாம் பிரிவுக்கோஷ்டிக்கும், உரும்பிராய் இந்துக்கல்லூரி இரண்டாம் பிரிவு கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

இடைவேளைக்கு முன் முதன்முதலாக மத்தியகல்லூரியைச் சேர்ந்த பெர்ணண்டோ ஒரு கோல் போட்டார். அதையடுத்து இந்துக்கல்லூரிக்கும் ஒரு பனல்டி கிடைத்தது. ஆனால் அதை இந்துக்கல்லூரி முன்னணி வீரர் சரியாகப் பயன்படுத்தவில்லை.

யாழ். மத்தியகல்லூரியைச் சேர்ந்த நவீனராசா, பரமசிவம், குகனேசராசா ஆகியோர் திறமையாக விளையாடினர்கள். அடிக்கடி இந்துக்கல்லூரி கோல்காப்பு வீரருக்கு வேலைகொடுத்தார்கள். இந்துக்கல்லூரி கோல்காப்புவீரர் பாராட்டுக்குரியவராவர்.

இடைவேளைக்கு முன் இந்துக்கல்லூரி ஒரு கோலுமே போடவில்லை. இடைவேளைக்குப்பின் மத்தியகல்லூரியைச் சேர்ந்த புரட்சிதாசன் தமது கோல்காப்புவீரரான விசுவநாதனிடம் பந்தைத் தட்டிக் கொடுக்கும்போது அது கோலுக்குள் நுழைந்துவிட்டது. ஒவ்வொரு கோஷ்டியும் தலா ஒரு கோல் போட்டு வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. உரும்பிராய் இந்துல்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு கே. மகாதேவன் மத்தியஸ்தம் வகித்தார்.

## விறுவிறுப்பான போட்டி

யாழ்ப்பாணம், திங்கள் சென்.ஜேன்ஸ் கல்லூரியின் முதலாம் பிரிவு இரண்டாம் பிரிவு கோஷ்டிகளுடன் விளையாடிய உதைபந்தாட்டப்போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் இரு உதைபந்தாட்டப் பிரிவுகளும் ஒரு கோல்தானும் போடாமல் படுதோல்வியடைந்தது. 2-ம் பிரிவுப்போட்டியில் சென். ஜோன்ஸ் வீரரான விஜயகுமார் முதலில் ஒரு கோல் போட்டார். இடைவேளைவரைக்கும் ஹாட்லி வீரர்கள் ஒரளவுஉற்சாகத்துடன் விளையாடினர்கள். இடைவேளைக்குப்பின் அவர்களுடைய விளையாட்டு 'போர்' அடிக்கத் தொடங்கி விட்டது. சென்.ஜேன்ஸ் வீரர்களான விநாயகமூர்த்தி, குகவரதராசன், சுகுமார் ஆகியோர் திறமையுடன் விளையாடி விஜயகுமார் மூலம் மேலும்கோல்களைச் சேர்த்தனர். முடிவில்சென்.ஜோன்ஸ் வீரர்கள் ஹாட்லி வீரர்களை 4—0 கோல்களால் தோற்கடித்தனர்.

முதற்பிரிவுக்கான போட்

(5-ம் பக்கம் பார்க்க)

## சென். ஜோன்ஸ் வென்றது

யாழ்ப்பாணம், திங்கள் சென் பற்றிக்ஸ் கல்லூரியும் சென்ஜோன்ஸ் கல்லூரியும் போட்டியிட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் சென்ஜோன்ஸ் கோஷ்டி சென்பற்றிக்ஸ் கோஷ்டியை தோல்வியடையச் செய்தது.

இடைவேளைக்கு முன் விளையாட்டு வெறும் மட்டமானதாகக் காணப்பட்டது. சென் ஜோன்ஸ் வீரர்கள் படிப்படியாக பந்தைப் போட்டு தமது புள்ளிகளை கூட்டிக்கொண்டே இருந்தார்கள். இடைவேளைக்கு முன் சென்பற்றிக்ஸ் கல்லூரி ஒரு புள்ளியுமே எடுக்கவில்லை. சென்ஜோன்ஸ் கல்லூரி 24 புள்ளிகளைப் பெற்றிருந்தது. இடைவேளைக்குப்பின் நடந்த போட்டியில் சத்தியநாதன், சிற்றம்பலம் ஆகிய பற்றிக்ஸ் வீரர்கள் படிப்படியாக புள்ளிகளைப் பெற்றுக்கொடுத்தார்கள். சென்ஜோன்ஸ் வீரர்களான நித்தியகீலன், சூரியகுமார், சவுந்திரநாயகம் ஆகியோர் முறையே 16, 12, 14 புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தார்கள். இடைவேளைக்குப் பின் விளையாட்டு ஒரளவுக்கு ரசிக்கத் தகுந்ததாக இருந்தது.

போட்டி முடிவில் (48-18 சென்ஜோன்ஸ் சென்பற்றிக்ஸ்கோஷ்டியைத் தோற்கடித்தது யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. பாலசிங்கமும் திரு. நித்தியானந்தனும் மத்தியஸ்தம் வகித்தார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### யாழ்ப்பாண மாநகரசபை

**கேள்விப்பத்திர அறிவித்தல்**

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிட மிருந்து யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் பருத்தித்துறை ரேட்டுக்கு கிழக்குப்பக்கமாகவும் மேற்குப்பக்கமாகவும் உள்ள இடங்களுக்கு வீதிகள், கட்டடங்கள் போடுவது சம்பந்தமான எல்லா வேலைகளுக்கும் தேவையான சாமான்கள் 1966-ம் ஆண்டுக்கு வினியோகிப்பதற்கு முத்திரை இடப்பட்ட இரு பிரதிகளுடன் கூடிய கேள்விப் பத்திரங்கள் 19-11-65-ம் திகதி பி. ப. 3-00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. 15-11-65-ம் திகதி பிற் கல் 3-00 மணி வரை மாநகரசபை மராமத்து பொறியியலாளரிட மிருந்து மேற்படி வேலைக்குரிய பொருட்கள் வினியோகிப்பதற்கு முறையே ரூபா 50/- கேள்வி வைப்புப்பணமாகவும் ரூபா 5/- கேள்விப் பத்திரத்தின் பெறுமதியாகவும் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரத்தின் பெறுமதியான ரூபா 5/- திருப்பிக்கொடுபடமாட்டாது. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் மாநகரசபையுடன் வேலைப் பொருத்தத்தை ஏற்று ஏற்ற உடன்படிக்கை எழுதியபின்பு கேள்விப் பிணைப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

யாழ்ப்பாண மாநகரசபை மராமத்து பொறியியலாளரிடமிருந்து தேவையான மற்றும் விபரங்களை கந்தோர் நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பம் ஏ. எச். ஏ. சமி
ஆணையாளர்
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
20-10-65. 1221




### கொழும்பு

**திங்கள் 25-10-65**

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 ஞானஅமிர்தம், 7-45 திரைப்படஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரைப் படஇசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை, 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 எங்கள்விருப்பம், 9-30 தமிழ் மூலம் சிங்களம், 9-15 நேயர்விருப்பம், 10-15 எங்கள்விருப்பம்.

## தேவை

**உதவி முகாமையாளர்- கொள்வனவு உத்தியோகத்தர்**

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்திற்கு உதவி முகாமையாளர் - கொள்வனவு உத்தியோகஸ்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தகுதி:

அ. (அ) ஒரு பெரிய வர்த்தக ஸ்தாபனத்தில் 10 வருட வர்த்தக அனுபவம் பெற்ற ஒருவராக.

அல்லது

(ஆ) ஒரு பட்டதாரி

(இ) கணக்கியலில் போதிய அறிவு அவசியம்.

ஆ. 1-11-65ல் வயது 25—40.

இ. தமிழ் அறிவுடன் இலங்கைப் பிரஜையாக இருக்கவேண்டும்.

3. சம்பளம்

தகமைகாண்காலம் வரை மாதம் ரூ. 250/- சகலபடிகளும் உட்பட.

4. சேவை நிபந்தனைகள்

(அ) நியமனம் ஒருவருடகாலத்திற்கு தகமை காண் காலமாகஇருக்கும்.

(ஆ) தெரிவு செய்யப்பட்டவர் ரூ. 2000/- ரொக்கப் பிணையும், ரூ. 3000/- ஆதனப் பிணையும்சமர்ப்பித்தல்வேண்டும்.

விண்ணப்பங்கள் 6-11-65ல் அல்லது அதற்கு முன்னதாக, காரியதரிசி, யாழ்ப்பாணம் ப.நோ.கூ.ச. சமாசத்துக்கு (வரைவுள்ளது) கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப் படுதல் வேண்டும்.

''வேலைக்குவிண்ணப்பம்'' என உறையின் இடதுபக்க மேல் மூலையில் எழுதப்பட வேண்டும்.

காரியதரிசி,
யாழ்ப்பாணம் ப.நோ.கூ.ச. சமாசம் (வரைவுள்ளது)
74/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 1218

## சமாஜ விழா

சுழிபுரம், ஞாயிறு

யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாஜத்தினர் சமாஜ விழாவை அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடாத்த தீர்மானித்துள்ளனர். சமூகஜோதி சி. தியாகராசா தலைமையில் நடைபெற்ற செயல் கமிட்டிக்கூட்டத்தில் சமாஜ விழாவை விரிவாக நடாத்துவது சம்பந்தமாக ஆராயப்பட்ட பின்னர் ஒவ்வோர் காரியாதிகாரி பிரிவிலும் உபவிழாக்களை தைமாதத்தில் நடாத்துவதாகவும் யாழ்ப்பாணத்தில் சமாஜ விழாவை பின்னர் நடாத்துவதாகவும் திட்டமிடப்பட்டுள்ளது,

## கூடைபந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம், திங்.

வடமாகாண பாடசாலை வீரர்களின் கூடைப்பந்தாட்டப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரியும், கோப்பாய் கிறிஸ்தியன் கல்லூரியும் மோதிக்கொண்டதில் கிறிஸ்தியன் கல்லூரி வென்றது. இடைவேளைக்குமுன் நடைபெற்ற போட்டியில் கிறிஸ்தியன் கல்லூரி வீரர்கள் யாழ். மத்தியகல்லூரி வீரர்களுடன் பலத்த போட்டியிட்டார்கள் போட்டியும் மிகவும் விறுவிறுப்பாகக் காணப்பட்டது. இவ்விளையாட்டில் கிறிஸ்தியன் கல்லூரி வீரரான சுகுணசபேசன் மிகவும் உற்சாகமாக விளையாடினார்.

மத்திய கல்லூரி வீரர்களான ரங்கநாதனும், சத்தியவேலும் அதிகமான புள்ளிகளை எடுத்தனர். இடைவேளைக்கு முன் மத்திய கல்லூரி 8 புள்ளிகளையும் கிறிஸ்தியன் கல்லூரி 10 புள்ளிகளையும் பெற்றிருந்தது. இடைவேளைக்குப் பின் நடந்த போட்டியில் கிறிஸ்தியன் கல்லூரி கோஷ்டித் தலைவரான தேவராஜேந்திரன் அபாரமாக விளையாடி அதிக புள்ளிகளை அதிகமாக எடுத்தார். மத்திய கல்லூரி கோஷ்டித் தலைவரான சாந்திகரனும் பாராட்டத்தகுந்த விதத்தில்விளையாடினார். மத்திய கல்லூரி இடைவேளைக்குப்பின் மேலும் 13 புள்ளிகளையும் கிறிஸ்தியன் கல்லூரி 15 புள்ளிகளையும் எடுத்தன. போட்டி முடிவில் கோப்பாய் கிறிஸ்தியன் கல்லூரி 25—21ஆக யாழ் மத்திய கல்லூரியைத் தோற்கடித்தது. சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடந்த இப்போட்டிக்கு திரு. விக்னேஸ்வரனும், திரு. சுந்தரலிங்கமும் மத்தியஸ்தம் வகித்தார்கள்.

## விறுவிறுப்பான....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

டியில் முதலில் சென்.ஜோன்ஸ் வீரரான தெய்வேந்திரன் ஒரு கோலைப் போட்டார். அதையடுத்து ஸ்ரீரங்கன் ன்னும் வீரர் ஒரு கோலை உதைத்துத் தள்ளினார். இடைவேளைக்கு முன் கோல்கள் விபரம் இரண்டு ஆக இருந்தது, ஹாட்லிக் கல்லூரியின் 1-ம்பிரிவு கூட ஒரு சிறந்த கோஷ்டியாகக் காணப்படவில்லை. அவர்களின் விளையாட்டு மிகவும் 'மட்ட'மாக இருந்தது. சென்.ஜோன்ஸ்வீரர்களான சிவகுமார், குவின்ரஸ், ரட்ணம் ஆகியோர் திறமையாக விளையாடி இரு கோல்களைப்போட்டனர். போட்டியில் சென்.ஜோன்ஸ் வீரர்கள் வழமைபோல் நன்றாக விளையாடிய போதிலும் ரசிகர்களுககு ஒரு நல்ல விருந்தாக அமையவில்லை. போட்டி முடிவில் சென். ஜோன்ஸ் வீரர்கள் ஹாட்லிக்கல்லூரியை 3—0 கோல்களால் தோற்கடித்தனர். சென்.ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு திரு. தவகுலசிங்கம், திரு. குமரையா ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

## வரி விளம்பரம்

### பிறந்தநாள் நினைவு

அன்புச் செல்வா குரு மோகன் நுமக்கு எமது பிறந்தநாள் வாழ்த்துக்கள்! சென்ற ஆண்டுப் பிறந்த நாளை இன்று நினைவு கூறுகிறோம். அன்று உமது 'பயிலா' நடனத்தால் எம்மை மகிழ்வித்த நீர் இன்று எங்கே சென்றீர். எங்கிருந்தாலும் எமது உளங்கனிந்த வாழ்த்துக்களை ஏற்றுக்கொள்ளும் ராசா. பரிசுகளை உரிய இடத்துக்கு அனுப்பிவைத்துள்ளோம். உமது பிரிவால் வாடும் உற்றார் பெற்றார், சசி, வாணி. 1173

### கல்வி

ஜி. சி. ஈ. உயர், சாதாரண, கலை, விஞ்ஞான, துரித (Rapid Revision) மீட்டல் வகுப்புகள் 1-11-65ல் ஆரம்பமாகின்றன. உடனே சேருங்கள். யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர், யாழ்ப்பாணம். 1169

### தேவை

யாழ்ப்பாணம் மணிக் கூட்டு வீதியில் இருக்கும் யாழ்ப்பாடிஐக்கிய பண்டகசாலைக்கு ஒரு திறமை வாய்ந்த மனேஜர்தேவை. அனுபவத்தையும் திறமையையும் பார்த்துச்சம்பளம் நிர்ணயிக்கப்படும். கூட்டுறவுப் பயிற்சி, மேலதிக தராதரமாகக் கவனிக்கப்படும். பிணை ரொக்கம் ரூபா1000/- விண்ணப்பதாரர்கள்தங்கள் தராதரங்களைக் குறித்து, 5-11-65-க்கு முன் காரியதரிசி, யாழ்ப்பாடி ஐக்கிய பண்டகசாலை, 241, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 1172

வெளிவேலை கவனிப்பதற்கு அனுபவம் வாய்ந்த ஆண், பெண் பிரதிநிதிகள் (Field Representatives) தேவை. மாதச் சம்பளமும் கொமிஷனும் கொடுக்கப்படும். 28-10-65க்கு முன் விண்ணப்பிக்கவும். சாலி கோப்பறேஷன், 30, 32, பேங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். 1176

நெசவுத்தொழிலில் பயிற்சியுள்ளவர்கள் தேவை. அனுபவம், கோரும் சம்பளம் முதலானவை குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும். சாலி கோப்பறேஷன், 30,32 பேங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். 1179

## யாழ்ப்பாணக்கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், திங்

யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ், இந்துக்கல்லூரிக்கும் நடைபெற்ற முதலாம் பிரிவுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றியீட்டியது. இடைவேளைக்கு முன் நடந்த போட்டியில் முதலில் இந்துக்கல்லூரி வீரரான யோகராசா ஒரு கோலைமிகவும் சாதுரியமாக உள்ளே தள்ளினார். யாழ்ப்பாணக் கல்லூரி ஒருகோலும்போடவில்லை. இடைவேளைக்கு முன் விளையாட்டு ரசிக்கத் தக்கதாகக் காணப்படவில்லை. இடைவேளைக்குப் பின் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஒருபுது உற்சாகம் காணப்பட்டது. இந்துக் கல்லூரி வீரர்களைச் சுற்றி வளைத்து ஒரு கோலைசாதுரியமாகப் போட்டார்கள். யாழ்ப்பாணக்கல்லூரியின் முன்னணிவீரர்கள் மிகவும் திறமையாக விளையாடத் தொடங்கினார்கள். செல்வநாயகம் என்னும் வீரர் அடுத்தடுத்து இரண்டுகோல்களை உதைத்துத்தள்ளினார் கடைசிநேரத்தில் இவரின் முயற்சி பாராட்டத்தகுந்ததாகும். விளையாட்டு முடிவில் யாழ்ப்பாணக்கல்லூரி 3-1 கோல்களால் யாழ். இந்துக்கல்லூரியைத் தோற்கடித்தது. யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடந்த இப்போட்டிக்கு யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வலன்றைனும் இந்துக்கல்லூரிக்கு ஸ்கந்தகுமாரும் தலைமை தாங்கினர். திரு. பி. ஏகாம்பரம் மத்தியஸ்தம் வகித்தார்.

## நெல்லியடிவென்றது

உடுப்பிட்டி, ஞாயிறு

வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி நான்காம் பிரிவினருக்கும் நெல்லியடி அ. ம. ம. வித்தியாலய 4-ம் பிரிவினருக்குமிடையே நெல்லியடியில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இரு கல்லூரிகளும் முறையே 1—1 புள்ளிகள் பெற்று போட்டியைச் சமப்படுத்தின. இப்போட்டிக்கு நெல்லியடி அ. ம. கல்லூரி கணித ஆசிரியரும் விளையாட்டுத்துறைச் செயலாளருமான திரு. மு. இராமகிருஷ்ணன் மத்தியஸ்தம் வகித்தார்.










ராதா மின்சார மருந்து

தலையிடி, ஒற்றைத் தலைவலி, ஜலதோஷம், மூக்கடைப்பு, வலிப்பு, நோவு, உளைவு, வீக்கம், நரம்புச் சுளுக்கு, கைகால் முடக்கு, வாதம், பக்கவாதம், மொளிவாதம், மாறாத இரணம் வெட்டுக்காயம், நரம்புச் சிலந்தி, பிளவை, புரையோடும் ஆறாத புண்கள், காதுவலி, காதில் சீழ் வடிதல், பீநிசம், பல்வலி, அரணை, வீக்கம், தேள் விஷம், நாய் கடி இவை வெளிப்பூச்சினாலும், வாந்திபேதி, அஜீரண பேதி, உஷ்ணபேதி, வயிற்று வலி, வயிற்றுப் பொருமல், வாய்வு, மாரடைப்பு முதலிய அநேக ரோகங்கள் உள்ளுக்குப் பாவிப்பதாலும் சில நிமிஷங்களில் நீங்கிவிடும்.

தயாரிப்பவர்கள் ராதா புரடக்ஸ்.

விநியோகஸ்தர்கள்:- போன்: 541

எஸ். சுப்பிரமணியம் அன் கோ

53, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு.

புட்டி ஒன்றின் விலை ரூபா 1-50

வியாபாரிகளுக்கு விசேஷ கமிஷன் உண்டு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தயிர்முட்டி

சுழிபுரம், ஞாயிறு

தொல்புரம் கிழக்கு வாலிபர்கள் தீபாவளித்தினத்தன்று பிற்பகல் தொல்புரம் மடத்துப் பிள்ளையார் கோவில் வீதியில் தயிர்முட்டி அடித்தனர். அநுமார் ஆட்டம் ஆகியவையுடன் தொல்புரம் பிரதானவீதி வழியாக ஊர்வலமாகக் கொண்டு சென்றனர்.

## எம். ஜி. ஆர். . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடியதாக இருந்தது. எம். ஜி. ஆர். இங்கும் விஜயஞ்செய்ததன் மூலம் பணத்தை அதிகம் செலவழித்துகொழும்பு செல்ல முயற்சித்ததர்களுக்கு அந்தச் சிரமத்தை நீக்கிவிட்டார். இருந்தாலும் இங்கும் அவரைக் காண்பதில் பலர் பல 'தொல்லைகள்' அடைந்தனர் என்பது உண்மை.

## இலவச சினிமாப் படக் காட்சி

தொல்புரம், ஞாயிறு

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய வாசிகசாலையின் ஆதரவில் மேற்படி நிலைய விளையாட்டு மைதானத்தில் இம்மாதம் 26ந் தேதி செவ்வாய்க்கிழமை மாலை ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் இலவசசினிமாப் படம் காண்பிக்கப்படும்.

REGAL--JAFFNA
NOW SHOWING!
GUY WILLIAMS
in
CAPTAIN SINDBAD
(Wondrascope-Color)

## சிறுவர் . . . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நூல்கள் இப்படிப் பலதரப்பட்ட புத்தகங்கள் தேவையாகின்றன. இனி சிறுவர்கட்கான புத்தகங்கள் மும்மொழிகளிலும் நமது நாட்டில் பெறக்கூடியதாக அமைந்ததுடன் வெளிநாடுகளில் நாம் தேவையான புத்தகங்களை வேண்டுவதற்கு வாய்ப்பும் இருக்கிறது.

பெரும்பாலான பெற்றோர்கள் குழந்தைகளின் பாடசாலைப்புத்தகங்களையே வாங்க முடியாத தரித்திர நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் குழந்தைகட்குப் பொழுதுபோக்குக்கான புத்தகங்களை எங்கே வாங்கிக் கொடுக்கப்போகின்றார்கள்.

எமது தற்போதைய நிலைமையை ஆராய்ந்து பார்க்கும்பொழுது போதுமான இட வசதியும், சிறுவர் பகுதியை அமைப்பதில் வழிகாட்டியாக விளங்குவதற்கு சிறுவர் இலக்கியத்தில் பயிற்சி பெற்ற ஒருவரின் சேவையும், திட்டத்தை நிறைவேற்றத் தேவையான பணத்தைப் பெறக்கூடிய வாய்ப்பும், நூல் நிலையத்தைச் சரிவர ஆதரிப்பதற்குப் போதிய பிள்ளைகளும் இருப்பதைக் காணலாம். உண்மை ஆர்வத்துடன் முறையாகச் செய்யப்படும் எந்த ஒரு முயற்சியும் தகுந்த பலனைத்தரும்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## எம்.பி. தலையீடு பலனளித்தது

யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் காரியாலயத்தில் சம்பளத் தொழிலாளராகத் தெரிவுசெய்வதற்குச் சில நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாண அரசாங்க காரியாலயத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. இப்பரீட்சைக்கு தோன்றியவர்கள் கொழும்பு திணைக்களம் மூலம் அனுப்பப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்சமயம் கச்சேரியில் வேலைசெய்யும் நாள் சம்பளத் தொழிலாளர்கள் பாராளுமன்ற அங்கத்தவர்களின் கவனத்துக்கு இவ்விஷயத்தைக் கொண்டுவந்தனர். இதுகுறித்து நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியதன் காரணமாக இவ்விஷயம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பெற்றோர் ஆசிரியர் சங்கம்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் திருவடிநிலை தமிழ்க்கலவன் பாடசாலை பெற்றோர்-ஆசிரியர் சங்க பொதுக்கூட்டம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. தலைமையாசிரியர் திரு ச. சிதம்பரப்பிள்ளை தலைமையில் கூட்டம் நடைபெற்றது. நடப்புவருட உத்தியோகஸ்தர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: ச. சிதம்பரப்பிள்ளை. உபதலைவர்: திரு. சி. நடேசு, காரியதரிசிகள்: மு. தம்பிஜயா, மு. ஆண்டிஜயா, தனாதிகாரி: மா. பொன்னையா நிர்வாகசபை உறுப்பினர்: க. சின்னையா, க. வயிரவன்.

## எம்.பி.க்கு சுகவீனம்

பம்பலப்பிட்டி, ஞாயிறு

திஸமகாரும பாராளுமன்ற உறுப்பினர் திரு. சாளி எதிரிசூரியா சுகவீனம் காரணமாக கொழும்பு அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுண்டிக்குழி வட்டாரம் 4 பரப்பு. பரப்பு5000/-. விபரங்கட்கு: பூகன்ஸ், பழைய பஸ் நிலையம், 71, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 1170

மயிலிட்டி — கட்டுவன் ரோட்டுக்கருகிலுள்ள குளத்துக்கு தென்மேற்கே, சுமார் 32 பரப்பு நிலம் விற்பனைக்குண்டு. மின்சார வசதியுள்ளதும் பயிர்ச்செய்கைக்குகந்ததுமான கல்லில்லாப் பிரதேசம். பரப்பு ரூபா 1250/- விபரங்களுக்கு: வ. பாலசுப்பிரமணியம், 45, 36-வது ஒழுங்கை, வெள்ளவத்தை என எழுதுக. 1156

வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ராஜ் (நீர்கொழும்பு)
தீவொளி (நுவரேலியா) ராஜா (யாழ்ப்பாணம்) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 10, 2, 6, 9-30 மணிக்கு

தென்னாட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!

'நான் ஆணையிட்டால்—அது நடந்துவிட்டால்—இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார்''

எம். ஜி ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னா, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
(ஈஸ்ட்மென் கலர்)

குதிரை மார்க் வாளிகள்



குதிரை மார்க் கல்வனைஸ்ட் வாளிகளை வாங்கி உபயோகிக்கிறீர்களா?
இன்றே வாங்குங்கள்

குதிரை மார்க் வாளிகள் தரத்தில் உயர்ந்த இரும்புத் தகடுகளினால் செய்யப்பட்டவை. எங்கள் தொழிற்சாலையில் மட்டும் கல்வெக்ஸ் முறைப்படி விசேஷமாக தயாரிக்கப்படுவன. உங்களுக்கு வேண்டிய எல்லாவித அளவுகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள்:
எல்பிஹெம் ஹவுஸ்
கொழும்பு-11.

வடமாகாண விநியோகஸ்தர்:
தனலக்குமி ஸ்ரோர்ஸ்
தெல்லிப்பளை.

ஏனைய மாகாணங்களுக்கு:
மஸ்கன்ஸ் லிமிட்டெட்
கொழும்பு-12.

குதிரை மார்க் • HORSE BRAND

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org